
மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை.

# சூழல் சுடர்

கார்த்திகை - 1993 ★ "மன்று", 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு. ★ 11



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" இவ்விதழை மாதம் ஒருமுறை விரிக்கிறது.

பிறந்தது விஞ்ஞான உலகம் – அதில்
புகுந்தது புதிய தொழில்நுட்பம் –
இதனால்
பகைத்திட்டான் மனிதன் இயற்கையை -
அதனால்
எழுந்தது மாசுள்ள சூழல் – அந்தோ!
கலங்குது உள்ளங்கள் பயத்தால்.

# பூச்சிகள் மானிடர்க்கு உணவு......!

— யோ. இ. கிறிஸ்ரோபர் —

பூச்சிகள் என்றாலே மனிதன் அவைகளை வெறுப்புணர்வுடன் பார்க்கின்றான். அவைகள் உடலில் பட்டால், பயத்தில் உடல் அதிரக் கத்துகின்றான். ஆனால், ஆதிகால உணவு வகைகளை ஆராய்ந்தால் பூச்சிகள், தற்போதைய விட்டமின் குளிசைகளைவிடச் சிறந்த போஷாக்குணவாக மனிதருக்கும் பயன்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

தற்போதும், விசேடமாக மேலைத்தேய நாகரீகங்களுக்கு முற்றாக அடிமையாகாத மூன்றாம் மண்டல ஆசிய. ஆபிரிக்க, ஆசிய பசுபிக், ஆஸ்திரேலிய, லத்தீன் அமெரிக்க நாடுகளில் பூச்சிகள் விரும்பி உண்ணப்படுகின்றன. அத்துடன் வறிய மக்களின் போஷாக்குக் குறையை நிவர்த்தி செய்யும் உணவாகப் பயன்படுகின்றது. ஆனால், விவசாய, உணவு விஞ்ஞானிகள் இதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மனிதவர்க்க சாஸ்திர நிபுணர்கள், ஆய்வாளர்கள், தேசாந்திரிகள், இயற்கைவள விஞ்ஞானிகள் போன்றோர் சுதேசிய குடிகள் பூச்சிகளைத் தங்கள் நாளாந்த உணவுடன் சேர்த்துக்கொள்வது பற்றிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள்.

பல்வகையான பயிர்களை நாசப்படுத்தும் வெட்டுக்கிளி (Locust - Schistocerca gregaria), தத்துவெட்டி (Grass hoppers) என்பன வட ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலும், லத்தீன் அமெரிக்காவிலும் உள்ள மக்களினால் விரும்பி உண்ணப்படுகின்றது. இப்பூச்சிகள் உவர்நீரில் அவித்து, வெயிலில் காயவைத்துப் பதப்படுத்தப்பட்டு உலர்நிலையில் பாதுகாக்கப்படுகின்றன. இவற்றில் 25 - 35 இனங்கள் உண்ணப்படுகின்றன.

விட்டில் பூச்சிகளும், வண்ணாத்திப் பூச்சிகளும் முதிர்ச்சியடையுமுன் புழுப் பருவமாக இருக்கும் பொழுது அவைகள் சேகரிக்கப்பட்டு உணவிற்குப் பாவிக்கப்படுகின்றன. அதேபோல் எறும்புகளும் சிறகு முளைத்துப் பறக்கத்தொடங்கியபின் அவைகள் சேகரிக்சப்பட்டு சிறகுகள் அகற்றியபின் எண்ணெய்யில் வதக்கி உண்ணப்படுகின்றன. கிழக்காபிரிக்காவில் இரவில் பாதை ஓர மின் விளக்குகள் ஏற்றப்பட்டபின் வெளிச்சத்தை நோக்கி ஈர்க்கப்பட்டுவரும் வெட்டுக்கிளிகள், தத்துவெட்டிகள், ஈசல்களை உணவிற்காகச் சேர்ப்பதற்குக் கிராம மக்கள் பெருமளவில் ஒன்றுகூடுவார்கள்.

மண்புழு புரதச்சத்தைப் பெருமளவில் கொண்டுள்ளது. உலர்நிலையில் 65%மும், உயிர்நிலையில் 10% புரதச்சத்தும் கொண்டுள்ளது. மண்புழு தவிர்ந்த மேற்கூறப்பட்ட மற்றப் பூச்சிகள் யாவும் தாவரங்களுக்குத் தீமையையே உண்டாக்குகின்றன. இவற்றை நாம் கிருமிநாசினிமூலம் அழிக்கத் தெண்டிக்கிறோம். ஆனால், நாம் கண்டது என்ன? இப்பூச்சிகள் எதிர்ப்புச்சக்தியை உருவாக்கி முன்னரை விடக் கூடிய நாசத்தை ஏற்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கட்டுரைச் சுடர் ★

## மழைகாலம் வருகிறது

திரு. கு. சண்முகம், களுவன்கேணி.

எமது பிரதேசத்தில் பருவமழை ஆரம்பித்து விட்டது, நீங்கள் செய்யவேண்டியது என்ன சிந்தித்தீர்களா? நமது மட்டக்களப்பு மாவட்டத்தில் வரட்சி தாண்டவமாடுகின்றது. கிணறுகள் வற்றுகின்றன, குடிநீருக்குத் தட்டுப்பாடு, குளங் குட்டை வற்றி வரள்கிறது, எமது கால்நடைகள் தவியாய்த் தவிக்கின்றன. பசுமை தவழ்ந்திருந்த எம் நிலத்தில் புழுதி பறக்கிறது. நம் புல் தரை யாவும் கருகிவிட்டது. கொழுத்தும் வெயிலோ அனைத்தையும் எரிக்கிறது. செய்பயிர் யாவும் வாடி வதங்குகின்றது. இத்தனைக்கும் காரணம் யார் என்பதும் என்னவென்பதும் உங்களுக்குப் புரிகிறதா?

செழித்து வளர்ந்து வளமூட்டிய காடுகளை ஈவு இரக்கமின்றி வெட்டியழித்தோம். வீடு கட்டவென்றும், விறகுப் பாவனைக்கென்றும் அழித்த காடுகள் கொஞ்சநஞ்சமல்ல. அது போதாதென்று தீ வைத்து எரித்தும் அழிக்கின்றோம். இதனால் நாம் கண்ட பலன் வரட்சி. இந்த வரட்சியிலிருந்து நமது சூழலைப் பாதுகாத்து வளமாக்கவேண்டியது நம் ஒவ்வொருவரினதும் இன்றைய கடமையாகும்.

இப்போது மழைக்காலம் தொடங்கப்போகின்றது. தரிசாகக் கிடக்கும் உங்கள் அயலில், வேம்பு, புளி, இலசு, இப்பில் இப்பில் முதலிய மரங்களின் விதைகளைத் தூவுங்கள், நாட்டுங்கள். நீங்கள் செய்யவேண்டியது அவ்வளவுதான். அது தானாக முளைத்து வளரும். வளர்ந்த மரக்கன்றுகளை வெட்டுவதை நிறுத்துங்கள்.

உங்கள் வேலிகளுக்காகவும், உங்கள் வளாகத்தின் வெளியிடங்களிலும் இந்தப் பருவமழையுடன் முருங்கை, இலட்சவட்டை, வாதணாராளி முதலிய பயன்தரு மரக்கிளைகளையும், கிளிசரியா, பூவரசு, கிளுவை போன்ற மரக்கிளைகளையும் நடுங்கள். அவை வளர்ந்து உங்களது கால்நடைகளுக்கு உணவாகவும், வேலிக்கு உறுதியான கதியாலாகவும் அது அமையும்.

இவ்வாறு செய்வதன் மூலம் நாளடைவில் எமது பிரதேசத்தை வரட்சியிலிருந்து நாம் மீட்டுக் கொள்வதுடன், பசுமை தவழும் பிரதேசமாக மாற்றிடவும் முடியுமல்லவா?

பருவமழை வந்துவிட்டது. தாமதியாது இன்றே நடுங்கள் மரக்கன்றை. அது எமது சூழலைப் பாதுகாக்கப் பேருதவியாக அமையும். ✱

## மண்ணரிப்பைத் தடுக்கும் இப்பில் இப்பில்

இப்பில் இப்பில் முக்கியமாக மண் அரிப்பைத் தடுப்பதற்கு உதவும் ஒரு மரமாகக் கருதப்படுகிறது. ஏனெனில், இம்மரம் வரட்சியையும் காற்றையும் தாங்கக்கூடிய சக்தியைக் கொண்டது. எம் நாட்டைப் பொறுத்தவரை மண் அரிப்பு பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருவதனால் இப்பில் இப்பில் நடுவது அவசியமாகின்றது.

இப்பில் இப்பில் இலைகளைச் சிறந்த உரப் பொருளாகவும், கால்நடைகளுக்கு உணவாகவும் பயன்படுத்தலாம். இதில் நைதரசன் அதிகளவில் உண்டு. பச்சை இலைகளை வெட்டி வீழ்த்தி மண்ணை மறைப்பதன்மூலம் மண்ணின் ஈரலிப்புத் தன்மை பாதுகாக்கப்படுவதுடன் மண்ணானது இளகி மண்ணுக்கு உரமும் இவ்விலைகளிலிருந்து பெறப்படுகின்றது.

திருமதி தயாபரன்,

ஆதாரம்: கமநலம், மார்கழி 1984.

"This beautiful earth on which we live deserves better treatment than what we have been giving it so far. Let us not indulge in acts which soil the streets, ruin the landscape, pollute the atmophere and harm the health of our fellow citizens. Let us keep our sorroundings clean. This is our social and moral duty."

Source : **A. D. B. of Pakistan.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

## உளமார ஒரு கவிதை

அன்று.....
ஆதாமும் ஏவாளும்
இறைவாக்கை மதியாது
தடைமீறிக் கனியுண்டதாலே

இன்று......
வான் மேலும் மண் கீழும்
வதைபட்டு வாழ்கின்ற
வழிகெட்ட மடமாந்தர் வந்தோம்

அதன்......
பழிபாவம் நாம் ஆளுகின்றோம்!

இன்று......
விறகென்றும் வீட்டுக்கு
'மால்' என்றும் கோலென்றும்
பல விதமாகப் பாவிக்கு(ம்) மரமே

அன்று......
முன்னோர்கள் தம் வாழ்வில்

முதிசமாய் முடிவதாய்
நமக்காக அவர்(கள்) விட்டதாலே
இல்லை......
நமைக்காக்க அவர்(கள்) நட்டதாலே!

இதை......
அறியாது நாம் செய்யும்
மரம்வெட்டும் வெகுமூடச்
செயலாலே நாம் மாளப் போ(கி)றோம்

வெகு......
விரைவாக நாம் மாண்டு போவோம்.

நாளை......
வருகின்ற சமுதாயம்
வளமோடு நிதம் வாழ
வழியென்ன நாம் கண்டு கொண்டோம்?

அதற்கோர்......
மரமேனும் நாம் நட்டு வைப்போம்!

உன்......
சூழல் சுற்றாடலை
சுயமாக நீ காத்து
சுகமாக வாழ்ந்திடுக என்று.

முழு......
மூச்சாக முரசொன்று
முழக்கியே செயலாற்றும்
முழுநேர உழைப்பாளன் 'மன்று'

தன்......
பணிமேலும் விரைவாக
பரந்தெங்கும் விரிந்தோங்க
உளமார நாம் வாழ்த்த வேண்டும்
பக்க......
பலமாக நாம் ஆக வேண்டும்.

ஆக்கம்: திரு ச பிரணவசோதி,
பெரியகல்லாறு, கல்லாறு.

## வேண்டுகோள்!

அதிவேகத்தில் சுழல்கின்றேன் நான்
உங்கள் செயல்களோ அதிலும் வேகம்
புரியவில்லையா உங்களுக்கு?
இன்னும் விளங்கவில்லையா?

மலையைவிடப் பெரிதாய்
குப்பைகள் தெருவிலே!
தொழிற்சாலைக் கழிவுகள்
ஓடுகின்ற ஆற்றிலே!
எதற்காக இச்செயல்?
என்னை மாசுபடுத்த
உங்கள் உள்ளம் இசைந்ததேன்?

நீங்கள் சிந்திக்கவில்லை – ஆனால்
சூழல் நான் கலங்குகின்றேன்
உங்கள் வருங்கால சந்ததி
நிலையெண்ணி......!

ஆக்கம்: கு. வெற்றிவடிவேல்,
மன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

## மரக்கன்றுகளை நாற்றுமேடைகளில் உண்டாக்கும் முறைகள்

**திரு. வி. சதாசிவம்,** மாவட்ட வன பரிபாலன அதிகாரி.

பல மர இன வித்துக்கள், சாதகமான நிலைகளின்போது எந்தவித மனித முயற்சிகளுமின்றி முளைத்துக்கொள்ளும் திறனுடையவையாகவும், வேறுபல மர இன வித்துக்கள், மனித முயற்சியின் மூலமின்றி தாமாகவே முளைத்துக்கொள்ளும் திறன் குறைவாகவோ அல்லது இல்லாமலோ உள்ளன. இதற்கு முக்கியமான காரணம் வித்துக்களின் உறங்கு நிலையாகும். இது வித்துக்கள் முளைத்து வளர்வதற்கான தகுந்த சூழ்நிலை இல்லாதபோது முளைவிடத்தொடங்கி முளை நிழ்ச்சி முற்றுப் பெற அச்சூழ்நிலை போதாமற்போகும் சந்தர்ப்பங்களை இயற்கையாகவே தவிர்த்துக்கொள்ளும் ஒரு சாதனமாகும். ஆயினும், நமது அவசரத் தேவைகளை அனுசரித்து, நாம் வேண்டியபோது வித்துக்களை முளைக்கச்செய்து பயிரினங்களை உண்டாக்கிக்கொள்ளச் செயற்கையான உறங்கு நிலையைக் கலைக்கும் முறைகளைப் பிரயோகிக்கிறோம். இச்செயற்கையான முறைகள் பலதரப்பட்டனவாயுள்ளன. உறங்குநிலை பல்வேறு காரணிகளால் இயற்கையாகவே பேணப்படுகிறது. உதாரணமாக, மிகக் கடினமான வித்து மேலுறைகள் சாதாரண ஈரலிப்பின் காரணமாக உறங்குநிலை கலைந்து வித்துக்கள் முளைத்துக்கொள்வதைக் கட்டுப்படுத்துகின்றது.

இயற்கை முறையாக இவ்வுறங்கு நிலையை உடைக்க நாம் விதைகளை நீண்ட மணிநேரம் நீரில் ஊறவைக்கிறோம். மேலும், சில இன வித்துக்களை ஊறவிட்டும், உலரவிட்டும் மாற்றி மாற்றிச் சிகிச்சை கொடுத்து, வித்து மேலுறையின் கடினத் தன்மையைக் குறைத்து, வித்துக்களை முளைக்கச் செய்கிறோம். தேக்கு போன்ற மர இனங்களின் வித்துக்களுக்கு இவ்வித சிகிச்சை அளிக்கப்படுகிறது. இனி சில வித்துக்களின் மேலுறைகள் நெகிழ்வாக இருந்தபோதும் வித்தின் கருவூலம் சாதாரண சாதக நிலையில் உறங்குநிலை கலையாத தன்மையை உடையவையாக இருக்கின்றன. இவை, வித்துக்கள் தாய்மரங்களை விட்டுப் பிரியும் தருணத்தில் பூரண வளர்ச்சி பெறாத கருவூலங்களைக் கொண்டவையாக இருக்கலாம். அவை முளைத்திறன் பெற மேலும் சில காலம் வித்தின் உள்ளேயே வளர்ச்சி பெறவேண்டியதனால் வெளி ஊக்குவிப்பால் முளைப்பதில்லை.

இனி, முளைப்பு நடைமுறையைத் துரிதப்படுத்துவதற்காக நாம் செயற்கையாகப் பல வழிகளைக் கையாளுகிறோம். அவற்றில் மேற்கூறிய நீரில் ஊறவைக்கும் முறைபோல் அமிலங்களில் அமிழ்த்தியும், வித்துக்களின் முளைகளை வெட்டியும் அல்லது வித்து மேலுறைகளில் வெடிப்புக்களை ஏற்படுத்தியும், மேல் உறைகளை முற்றாக நீக்கியும் அல்லது மேலுறைகளின் தடிப்பை மண், கடதாசி கொண்டு தேய்த்துக் குறைத்தும் முளைப்பு முறையைத் துரிதப்படுத்தலாம்.

சில வித்துக்கள் உயிரின சம்பந்தங்களினால் முளைதிறன் அதிகரிக்கப்பெறுகின்றன. உதாரணமாக, கறையான்கள் வித்து மேலுறைகளை அரிப்பதனால் முளைப்பு சுலபமாக அடையப்பெறுகிறது. தேக்கு போன்ற வித்துக்களில் இதனை நாம் அவதானிக்கலாம். பறவைகளாலும், மிருகங்களாலும் உட்கொள்ளப்படும் பழங்களின் விதைகள் எச்சத்துடன் சழியும்போது வித்து மேலுறைகள் இளக்கம் பெற்று முளைதிறன் எளிதாகிறது. ஆடு முதலிய மிருகங்களால் விழுங்கப்பெற்ற அக்கேசியா விதைகள் மிகச் சுலபமாக முளைப்பது கண்டறியப்பட்டுள்ளது. சாதாரணமாகக் கொதிநீரில் ஊறவிட்டு அக்கேசியா விதைகள் முளைப்பிக்கப்படுவது தெரிந்ததே.

### வித்துக்கள் விதைக்கும் முறைகள் :-

நம் பிரதேசத்து மர இனங்களை விதைப்பதில் எவ்வித சிரமமுமில்லை. சிறிய விதை இனங்களை முறையாகத் தொற்று நீக்கித் தயாரிக்கப்பட்ட நாற்றுமேடைகளில் தூவி மெல்லியதாக மண் தூவி வைக்கோல் கொண்டு மூடி முளைக்கப்பண்ணலாம். பருமனான விதைகளை உதாரணமாக, பலா, முந்திரிகை, கத்தா, தேசி, தோடை, விளா போன்றவற்றின் விதைகளை நேரடியாகப் பொலித்தீன் உறைகளில் நட்டு முளைக்கச்செய்யலாம். நாற்றுமேடைகள் சுமாராகக் காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள இடங்களில் 40×4 அல்லது 20×4 அடிகள் என்ற அளவில் தயாரிக்கப்படலாம். கொய்யா, அக்கேசியா, யூக்கலிப்டஸ், இப்பில் இப்பில், தேக்கு போன்ற விதைகளை நாற்றுமேடைகளில் இட்டு முளைக்கச்செய்து பின்னர் பொலித்தீன் உறைகளில் வைக்கலாம்.

தொடரும்...

**"TREES FOR LIFE"**

"FORESTS FOR FOOD SE URITY AND ENVIRONMENTAL PROTECTION"

Source: **F. A. O.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் அபிவிருத்தியில் கிராமோதய சபைகளின் பங்களிப்பு

திரு. செ. புண்ணியமூர்த்தி,
(பிரா. உ. உ. ஆணையாளரும், சூழல் முகவரவைச் செயலாளரும்)

### மத்திய சூழல் அதிகார சபை:

இலங்கையில் சூழல் பாதுகாப்பு அபிவிருத்தி நிர்வாகம் என்பனவற்றிற்குப் பொறுப்பாக 1988 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்கச் சட்டமூலம் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் மத்திய சூழல் அதிகார சபை அமைக்கப்பட்டது. சூழல் துறையில் கல்வித்தகைமையும், அனுபவமும் கொண்டு அதிஉத்தம ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்களைக் கொண்டு மத்திய சூழல் அதிகார சபை இயங்குகின்றது. இம்மூவரில் ஒருவர் ஜனாதிபதியினால் அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்படுவார்.

### மாவட்ட சூழல் முகவரவை:

மேற்கூறிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அரசாங்க அதிபரைத்தலைவராகவும், உள்ளூராட்சி உதவி ஆணையாளரைச் செயலாளராகவும் கொண்ட மாவட்ட சூழல் முகவரவை அமைக்கப்பட்டுள்ளது. சூழல் அபிவிருத்தி பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் மாவட்டத் தலைவர்கள் இதில் அங்கத்துவம் வகிக்கின்றனர். சூழல் அபிவிருத்தி, பாதுகாப்பு நடவடிக்கைகளில் மத்திய சூழல் அதிகார சபையின் செயல் திட்டங்களை மாவட்ட மட்டத்தில் செயல்படுத்தி நிர்வகித்தல் இதன் பொறுப்பாகும். இதன் செயற்பாடுகளைப் பிரதேச செயலாளர் மட்டத்திற்குப் பன்முகப்படுத்துவதற்குச் சட்டமூலம் தயாரிக்கப்படுகின்றது.

### உள்ளூராட்சி ஸ்தாபனங்கள்:

சூழலைப் பேணுதலில் உள்ளூராட்சி ஸ்தாபனங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன. தத்தம் பகுதிகளில் சுகாதாரத்தைப் பேணலுக்கான நடவடிக்கைகளை எடுத்தல், சூழலை மாசுபடுத்துவோருக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்தல் என்பன உள்ளூராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சூழல பாதுகாப்புச் சட்டத்தின்கீழும், பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம், நகரசபைகள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் மூலம் சகல உள்ளூராட்சி ஸ்தாபனங்களும் சூழல் பாதுகாப்புச் சம்பந்தமான சட்டபூர்வ அதிகாரங்களைக் கொண்டுள்ளன.

### சூழல் குழுக்கள்:

கிராம மட்டத்திலே கிராமோதய சபைகள் சூழல் பாதுகாப்பு அபிவிருத்தியில் பெரும்பங்கு வகிக்கக்கூடிய நிலையில் உள்ளன. மத்திய சூழல் அபிவிருத்தி அதிகார சபையில் அதிகாரங்களைப் பன்முகப்படுத்தும் நோக்குடன் கிராம மட்டத்தில் சூழல் அபிவிருத்திக் குழுக்களை உருவாக்கும் நோக்கம் ஒன்று உள்ளது. இத்திட்டம் சட்டபூர்வமாக்கப்படின் சூழல் அபிவிருத்திக் குழுக்கள் மத்திய சூழல் அதிகார சபையின்கீழ் பதிவு செய்யப்பட்டு, கிராமோதய சபையில் அங்கத்துவம் வகிக்கும் தகுதியையும் பெறும். இதற்கு முன்னோடியாகக் கிராமோதய சபைகள் சூழல் அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுவாக்கிக்கொள்ளும் வகையில் தங்கள் பகுதிகளில் சூழல் குழுக்களை அமைத்துக்கொள்ளலாம்.

### சூழல் பாதுகாப்பில் மக்களின் பங்களிப்பு:

சூழல் அபிவிருத்தி, பாதுகாப்பு எனும் விடயத்தை நோக்கும்போது முதற்கண் மக்களின் பங்களிப்பு மிகவும் அவசியமாகப்படுகின்றது. ஏனெனில் சூழல் பாதுகாக்கப்படுவதும், சூழல் மாசுபடுத்தப்படுவதும் மக்களின் செயல்களிலேயே தங்கியுள்ளது. தனிப்பட்ட லாபம் கருதிச்செயற்படுபவர்களின் தெரிந்துகொண்டே செய்யப்படும் செயல்களினாலும், அறியாமையினால் பெரும்பாலோர் செயற்படுவதனாலும் சூழல் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றது. நிலம், நீர், காற்று என்பன எமக்கு இயற்கையினால் அளிக்கப்பட்ட சாதனங்கள். எமது வாழ்விற்கு மிக அத்தியாவசியமான இம்மூன்று சாதனங்களும் அநேகமாக அறியாமையினாலும், எமது தேவைகளை நாம் பூர்த்திசெய்ய முற்படுவதினாலும் மாசுபடுத்தப்படுகின்றன. எனவே மக்களிடையே சூழலைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திப் பாதுகாப்பில் மக்களின் பங்களிப்பை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும். இதில் கிராமோதய சபைகள் பெரும் பங்கு வகிக்கமுடியும்.

கிராம மட்டத்திலே பிரசாரக் கூட்டங்களை நடாத்துதல், பாடசாலை மாணவர்களிடையே சூழல் சம்பந்தமான விடயங்களின் மீதான போட்டிகளை நடாத்துதல், சூழலைக் கருப்பொருட்களாகக் கொண்டு நாடகம், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து என்பனவற்றை ஒழுங்குசெய்வதன்மூலம் மக்களிடையே சூழலைப் பற்றிய அறிவைப் புகட்டமுடியும். இதற்காகக் கிராமோதய சபைகள் பாடசாலைகளையும், பொதுக் சழகங்களையும் சிறந்த ஊடகங்களாகப் பயன்படுத்தலாம்.

மேலும் ஆண்டுதோறும் மக்களிடையே சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத் தினங்கள் கொண்டாடப்படுகின்றன. ஜூன் 5ந் திகதி உலக சூழல் தினமாகவும், ஏப்ரல் ந் உலக மண் தினமாகவும், செப்ரம்பர் 17ந் திகதி முதல் ஒரு வாரம்

(7ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்புகள்

★ திரு. ச. பிரணவசோதி,
கிராமோதய சபைத் தலைவர்,
பெரியகல்லாறு, கல்லாறு.

தாங்கள் சூழற் சுடர் மாசிகையைச் சந்தாதாரர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளமைபற்றி அறியக்கிடைத்தது, மிக்க மகிழ்ச்சி. வெளியீடுகள் இலவசமான பிரசுரங்களாயின் அதன் தரமும், தன்மையும் மக்கள் மத்தியில் இடம்பிடித்துக்கொள்வதில்லை. இக் கோட்பாடு வெறும் பிரசுரங்களுக்கு மட்டுமல்ல மற்றெல்லாவற்றிற்கும் பொருந்தும். அதிக விலை கொடுத்து வாங்கினோம் என்று ஒரு பொருளைக்காட்டி மார்தட்டுகின்ற இக்கால கட்டத்தில் கல்வியில்கூட இந்நிலை இல்லாமலில்லை. எவ்வளவுதான் 'இலவசக் கல்வி' என்றாலும் பாடசாலையில் இலவசமாக நடைபெறும் மாலை வகுப்புகளை விட, தனியார் கல்வி நிலையங்களுக்கே மாணவர் கூட்டம் மிக மிக அதிகம். எனவே, தங்கள் முடிவு நியாயபூர்வமானதும், வரவேற்புக்குரியதும் ஆகிவிடுகின்றது. ஆயினும், மாத, மும்மாத, அரை வருட, வருட சந்தாக்கள் என்பதிலிருந்து சற்று மேனோக்கி நிரந்தர அல்லது ஆயுட்கால சந்தா என ஒரு தொகையைப் பெற்று, சூழற் சுடருக்கு ஒரு நிரந்தர வாசகர் வட்டத்தை ஏற்படுத்திக்கொண்டாலென்ன? என்பது எனது தாழ்மையான ஒரு அபிப்பிராயம். அவ்வாறு செயற்படும்போது சூழற்சுடர் வெளியீட்டுக்கான கணிசமான ஒரு முதலீடு கிடைப்பதுடன், அதனை நல்ல பல வழிகளுக்குப் பயன்படுத்தக்கூடிய நிலைமையும் ஏற்படலாம். எனவே, இவ் விடயத்தில் தங்களின் கவனத்தை சற்றுச் செலுத்திக்கொள்ளுமாறு மிகவும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன். எனக்கும், எனது பாடசாலை நூலகத்திற்குமெனத் தங்கள் பிரசுரங்களின் இரு பிரதிகளைத் தவறாது அனுப்பிவைக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

★ திரு. எம். ஐ. எம். லியாத்,
யோ – யோ வி. கழகம்,
பழைய வீதி, காத்தான்குடி – 2.

சூழல் சம்பந்தமான இவ்வுயர் சேவையில் எனக்கு மிக்க ஆர்வமுண்டு. மேலும் யோ–யோ வி. கழகத் தலைவர் என்ற வகையிலே 'சூழல் சுடர்' ஆசிரியர் குழுவில் அங்கம் வகிக்க மிக்க ஆர்வமுடையவனாய் உள்ளேன். வாசக, அங்கத்தவர்களின் ஆக்கங்களைத் தொடர்ந்து அனுப்பிவைக்கவும் விரும்புகின்றேன். தயவு செய்து என்னையும் ஆசிரியர் குழு அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்வதுடன் 'சூழல் சுடர்' மாசிகையையும் தொடர்ந்து அனுப்பிவைக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

## வெளியீட்டுக் குழு

**சுடரின் தூண்டுகோல்:**

மனோ இராஜசிங்கம்
யோ. இ கிறிஸ்ரோபர் } மன்று

**நெறிப்படுத்துனர் குழு:**

அ. யோகராணி
க. லீலா
கு. வெற்றிவடிவேல் } மன்று

**ஆசிரியர் குழு:**

த. மதிவண்ணன் — வந்தாறுமூலை கி. அ.ச
பூ. சுந்தரலிங்கம் — பொது ஜன அ. ம.
வி. முரளீதரன் — செங்கலடி ம. வி.
லெ. முகம்மது அஸ்ரப் — அல்-ஹிரா வி.
பி. சந்திரவதி — உழைக்கும் ம. அ. நி.

**உங்கள் கவனத்திற்கு:**

''சூழல் சுடர்'' ஒரு மாதாந்த வெளியீடு இதனைத் தொடர்ந்து பெற விருப்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**சந்தா விபரம்:**

12 மாதம் — ரூ. 60/-
06 மாதம் — ரூ. 30/-
03 மாதம் — ரூ. 15/-
தனிப்பிரதி — ரூ. 5/-

காசோலை, மணியோடர், போஸ்ரல் ஓடர் யோ. இ. கிறிஸ்ரோபர் பெயரில் எடுக்கவும்.

"WE MUST GROW WHAT WE EAT, AND EAT WHAT WE GROW."

— **Popular saying in Ghana.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் அபிவிருத்தியில்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மரநடுகை தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இத்தினங்களிலே கூட்டங்கள், கருத்தரங்குகள், மரநடுகை, சிரமதானங்களை ஒழுங்கு படுத்துவதன்மூலம் கிராமோதய சபைகள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அவர்களின் பங்களிப்பையும் பெறமுடியும்.

**பாடசாலை சூழல் அணி:**

மத்திய சூழல் அதிகார சபை பாடசாலைகளிலே சூழல் அணிகளை உருவாக்கி அவற்றின்மூலம் பல செயற்பாடுகளை அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. சூழல் அணி அமைப்பது தொடர்பாக மத்திய சூழல் அதிகார சபையின் வழிகாட்டலில் மாவட்ட சூழல் முகவரவை ஒரு வழிகாட்டற் குறிப்பைத் தயாரித்துள்ளது. ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு முக்கிய பாடசாலைகளில் சூழல் அணிகள் அமைக்கப்பட்டுச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ''மன்று'' நிறுவனத்தின் அனுசரணையுடன் இது மேலும் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

சமுதாயத்திலே மிக செல்வாக்கும், முக்கியத்துவமும் பெறும் மாணவர்களைக்கொண்டு ஒவ்வொரு கிராமோதய சபையும் தங்கள் பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளில் சூழல் அணிகளை அமைத்துச் செயற்படுத்துவதன்மூலம் சூழற் பாதுகாப்பிற்குப் பெரும் பங்களிப்பைச் செய்யமுடியும். இச்சூழல் அணிகள் பாடசாலைகளில் நாற்று மேடைகளை அமைத்து இலகுவிலையில் அல்லது இலவசமாக மரக்கன்றுகளை வழங்கலாம். பொது இடங்களிலும், சாலை ஓரங்களிலும் மரநடுகைகளை மேற்கொள்ளலாம். சிரமதானங்களை ஒழுங்கு செய்வதன்மூலம் வீதிகளைத் துப்பரவு செய்யலாம். மக்களிடையே பிரசாரங்களை மேற்கொண்டு சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

**மரநடுகை:**

சூழல் எனும்போது மரம் மிக முக்கிய இடத்தைப் பெறுவது உங்கள் யாவருக்கும் தெரிந்த விடயம். சிறந்த காற்றைப் பெறுவது, மழை வீழ்ச்சி, மண்ணரிப்பைத் தடுத்தல் என்பனவற்றிற்கு மரம் மிக அத்தியாவசியமான ஊடகம். மேலும், வீடு, தளபாடம், விறகு எனும் தேவைகளையும் பூர்த்திசெய்வதில் மரம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. காடுகள் பெரும்பாலும் மரத்தேவைகளுக்காகவும், விவசாயத்திற்காகவும், வதிவிடங்களை அழிக்கப்படுகின்றன. எனவே ஒரு சமநிலையைப் பேணுவதற்காக மரநடுகை அவசியம்.

ஒவ்வொரு கிராமோதய சபையும் தங்கள் பகுதியில் சிறிய அளவிலான சமூகக் காடமைப்புத் திட்டத்தைக் கிராம மக்களின் பங்களிப்புடன் அமுல்படுத்தலாம். சூழல் அணிகள்மூலம் வீதியோரங்களில் மரம் நடுதல், சேமக்காலைகள், குளக்கரைகள், ஆற்றோரம், ஆலய சுற்றாடல் என்பனவற்றில் சிரமதானமூலம் மரம் நடுகையை மேற்கொள்ளலாம். இவற்றைப் பராமரிக்கும் பொறுப்பை அந்த அந்த சூழலிலேயே வதிவோரிடம் பொறுப்பளிக்கலாம். மேலும், நாற்று மேடைகளை அமைத்து மாமரங்கள், நிழல்தரு மரங்கள் என்பவற்றைக் குறைந்த நிலையில் வழங்குவதன்மூலம் வீட்டுச் சுற்றாடலில் மரம் நடுகையை ஊக்குவிக்கலாம்.

**பொதுநல ஸ்தாபனங்களின் உதவி:**

சுற்றாடல், பாதுகாப்பு அபிவிருத்தி என்பவற்றிற்கான ஆலோசனை, சிறிய அளவிலான நிதி உதவி என்பவற்றினை 'மன்று' நிறுவனம் வழங்குகின்றது. அதே போன்று 'நொறாட்' ஸ்தாபனமும் சூழல் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி உதவிகளை வழங்கிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறான ஸ்தாபனங்களின் உதவிகளைப் பிரதேச செயலாளர் மூலமாகவோ, மாவட்ட சூழல் முகவரவையின் மூலமாகவோ பெற்றுக்கொள்ளமுடியும். மேலும் வன பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்தும் இலவசமாக நிழல் மரங்களைப் பெற்று விநியோகிக்கலாம்.

**சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடைசெய்தல்:**

சூழல் குழுக்களின் மூலமாகச் சட்டவிரோதமாக மரங்களை வெட்டுதல், மண்ணகழ்தல் போன்ற சூழலை மாசுபடுத்தும் செயல்களைக் கிராமோதய சபைகள் தடைசெய்யமுடியும். பிரதேச செயலாளருடனோ, பொலிசுடன் தொடர்பு கொண்டு அவர்களின் உதவியுடன் மேற்கூறியவாறான சமூக விரோத செயல்களைத் தடைசெய்யலாம். ✱

# விவசாய விவேகம்

1. பி. ஜி. நெல் வர்க்கங்களில் சம்பா அரிசியை விளைவாகத் தரும் வர்க்கங்கள் – பி. ஜி. 11-11, பி. ஜி. 450, பி. ஜி. 745.

2. மகாவலி 'பி', 'சி' வலைய விவசாயிகளுக்குப் பயன்படக்கூடியதாக நிருவப்பட்டுள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் - கிராந்துருக் கோட்டை.

3. தேன் குடியிலுள்ள ஆண் தேனீயான சோம்பேறித் தேனீயை அடையாளம் காணும் முறை கறுப்பு நிறமாகவும், வேலையாள் தேனீயை விடப் பெரிதாகவும், வயிற்றின் நுனி வட்டமாகவும், கண்கள், சிறகுகள் பெரியனவாகவும், உடல் முழுவதும் சிறு மயிர்களும் காணப்படும்.

— எம். அஹமட் ஆலீக், காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

பின்வரும் மரநாற்றுக்கள் சமூக மர நடுகைத் திட்டத்தின்கீழ் செய்யப்பட்டுள்ளன. நாற்றுக்கள் தேவையானோர் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

| கன்றுகள் | கோ. ப. | ஏ. ப. | ம. வ. | கா. ம. | ம. தெ. ப. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பலா | 200 | | | | | 200 |
| சவுக்கு | 200 | 100 | | | | 300 |
| வேம்பு | 1,000 | 708 | 3,000 | 2,223 | 1,000 | 7,931 |
| முந்திரிகை | | 500 | 59 | 523 | | 1,482 |
| நாவல் | 1,000 | 700 | 300 | 500 | | 2,000 |
| புளி | | 1,000 | | 50 | | 1,050 |
| அக்கேசியா | | 2,700 | | 288 | | 2,988 |
| கத்தா | | 400 | 500 | 41 | | 941 |
| மருதை | | | 500 | 464 | | 964 |
| இலுப்பை | | | 3 | 4 | | 7 |
| ஒதி | | | | 16 | | 16 |
| சமண்டலை | | | | 70 | | 70 |
| இப்பில் இப்பில் | | | 2,000 | 375 | | 2,375 |
| கோணப்புளி | | | 20 | | | 20 |
| புங்கை | | | 15 | 19 | | 34 |
| அன்னமின்னா | | | | 5 | | 5 |
| பொன்னாவரை | | | | 37 | | 37 |
| மஞ்சவண்ணா | | | | 8 | | 8 |
| இலவு | | | | 15 | | 15 |
| பப்பாசி | | | | 27 | | 27 |
| அகத்தி | | | | 316 | | 316 |
| அசோக் | | | | 64 | | 64 |
| கொய்யா | | | | 20 | | 20 |
| மகிழை | | | | 125 | | 125 |
| தேசி | | | | 38 | | 38 |
| மொத்தம் | 2,400 | 6,108 | 6,397 | 5,228 | 1,000 | 21,033 |

குறிப்பு:- கோ. ப. — கோறளைப்பற்று
ஏ. ப. — ஏறாவூர்ப்பற்று
ம. வ. — மண்முனை வடக்கு
கா. ம. — காத்தான்குடி, மண்முனைப்பற்று
ம. தெ. ப. — மண்முனை தென் எருவில்பற்று

To
சிவலிங்கம் ஆசிரியர்
கொறவன் கேணி

"மன்று",
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு.

இப்பிரசுரம் மன்று இணைப்பாளர் யோ. இ. கிறிஸ்ரோபரினால் மட்டக்களப்பு சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Com. by S. Singarajah.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org